1978, மார்ச் 2]

(இ) தேவையை ஒட்டி அவ்வப்போது மாற்றம் செய்யப் படுகிறது.

திரு. மு. அரங்கநாதன் : இந்த * * * * அரசுக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக் கேள்வியையொட்டிக் கேளுங்கள். அந்த விவரம் அங்கே இருக்க முடியுமா என்று யோசித்துக் கேட்க வேண்டும். எண்ணிக்கை கேட்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு செலவழித்தார்கள் என்றில்லை.

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : கேள்வி நேரத்தில் சார்ஜஸ் கூடாது என்பது நமது விதிமுறையில் இருக்கிறது. அதனுல் உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினு சரியாக இராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வியையொட்டி கேள்வி கேட்க வேண்டும். திரு அரங்கநாதன் கேட்ட கேள்வியில் அந்த வார்த்தைகளை நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு மு. அரங்கநாதன் : மின் பொறியாளர்களைப் பற்றிய கேள்வி இது, * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். கேள்வியையொட்டி துணைக் கேள்வி கேட்க வேண்டும். எழுந்து பேசிவிடுவது சுலபம். மீண்டும் அதையே பேசினுல் என்ன பொருள்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

குடும்பநலத் திட்ட விளம்பரப் பிரிவு.

*347 வினு—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பநலத் திட்ட விளம்பரப் பிரிவை தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறையுடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) குடும்ப நலத் திட்ட விளம்பரப் பிரிவு மட்டுமின்றி, வ்வசாயத் துறை போன்ற மற்றைய துறைகளிலுள்ள விளம்பரப் பிரிவுகளையும் தமிழக அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையுடன் இணைப்பது பற்றிய கருத்துரு ஒன்று மிகவும் தொடக்க நிலையிலுள்ளது. தொடர்புடைய துறைகளின் கருத்துக்கள் சேகரிக்கப்படுகின்றன.

தகவல் நிலையங்கள்.

*348 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ் நாட்டிலுள்ள தகவல் நிலையங்கள் (Information Centres) எத்தனை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மூன்று. சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

திரு எஸ். கணேசன் : பல சுற்றுலா மையங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க சிலைகளும் ஓவியங்களும் இடம் பெற்றிருக்கின்றன. உதாரணமாக பூம்புகாரில் சிலப்பதிகார காவியம் சிலைகளாக வடிக்கப்பட்டிருக்கிறது. வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு அந்தச் சிற்பங்களையெல்லாம் விவரிக்கின்ற முறையில் சுற்றுலா இன்பர்மேஷன் சென்டரில் பணியாற்றுகிறவர்களுக்கு பயிற்சி ஏதாவது அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மூலக் கேள்வி செய்தித் துறையிலுள்ள செய்தி நிலையங்கள் பற்றியது. சுற்றுலாத்துறை பற்றிய செய்தி நிலையங்களைப் பற்றித்தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துத் தரமுடியும்.

திரு. எம். ஏ. லத்தீப் : இத்தகைய செய்தி நிலையங்கள் இப்போது மாநிலத்தில் மூன்று இடங்களில் மட்டும் செயல் படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இப்படிப்பட்ட செய்தி நிலையங்களை ஏற்படுத்துவது தான் பயனுடையதாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?